விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: ஆறு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 வைகாசி 14 திங்கட்கிழமை (28.05.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 160

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

## குடும்பிமலைத் தாக்குதலின் போது 18 அதிரடிப் படையினர் படுகாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு குடும்பிமலை காட்டுப் பகுதியில் நடந்த மோதலில் சிறப்புப் பயிற்சி பெற்ற சிறப்பு அதிரடிப் படையின் 18 படையினர் படுகாயமடைந்தனர்.

கடந்த சில வாரங்களாகத் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள குடும்பிமலைப் பகுதியில் பாரிய தொடர்ச்சியான முன்நகர்வு நடவடிக்கைகளை சிறப்பு அதிரடிப்படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மேற்கொண்ட இத்தகைய நடவடிக்கையின் போது தமிழீழ (06 ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவுத் தாக்குதலையடுத்து இந்தியாவில் பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

நெடுந்தீவுப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதலை நடத்தியதனையடுத்து இந்தியக் கடற்படையினர் இராமேஸ்வரம் கடற்பரப்பில் கண்காணிப்புப் பணிகளை மேலும் தீவிரப்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவுப் பகுதி இந்தியாவின் சர்வதேச கடல் எல்லைக்கு மிக அருகில் அமைந்துள்ளதாகவும் இராமேஸ்வரத்திலிருந்து 30 நிமிடங்களில் அங்கு செல்லமுடியும் எனவும் கூறப்படுகின்றது.

இத் தாக்குதல் சம்பவத்தினையடுத்து இராமேஸ்வரம், (06 ஆம் பக்கம் பார்க்க)

# பாரிய நிதி நெருக்கடியில் மகிந்தவின் அரசாங்கம்!

## ஐக்கிய தேசியக் கட்சி தகவல்

(கொழும்பு)

அரசாங்கம் பாரிய நிதி நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். இந் நிதி நெருக்கடி காரணமாக வாழ்க்கைச் செலவு அதிகரித்து வருவதால் மக்கள் அதற்கு ஈடு கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

(06 ஆம் பக்கம் பார்க்க)

## சூட்டுக் காயங்களுடன் இளைஞர்களின் சடலம் மீட்பு

வவுனியா தவசிக்குளம் பகுதியில் நேற்று கைகள், கால்கள் கட்டப்பட்ட நிலையில் சூட்டுக் காயங்களுடன் இரு இளைஞர்களின் சடலங்கள் மீட்கப்பட்டதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவ்வாறு மீட்கப்பட்ட இரு சடலங்களும் அடையாளம் காணப்படாத நிலையில் வவுனியா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் இரவு சுடப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (சு-3)

## ஹெலஉறுமயவின் யோசனை நாளை சமர்ப்பிப்பு!

(கொழும்பு)

தாம் எதிர்பார்த்த திருத்தங்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தீர்வு யோசனைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

இதனையடுத்து நாளை தினம் தமது கட்சிகளின் யோசனைகளை சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவிடம் (06 ஆம் பக்கம் பார்க்க)

## கிளைமோர்த் தாக்குதலில் நேற்று மூவர் உயிரிழப்பு

(அம்பாறை)

அம்பாறை திருக்கோவில் பகுதியில் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் 3 பேர் உயிரிழந்துள்ளனர். நேற்றிரவு 6.30 மணியளவில் அக்கரைப்பற்று பொத்துவில் பகுதியில் வீதியில் பயணித்த லொறி ஒன்றினை இலக்கு வைத்து இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட (06 ஆம் பக்கம் பார்க்க)

## மோதல்களை முடிவுக்குக் கொண்டுவர ஈரான் அரசாங்கம் இலங்கைக்கு உதவும்

### அந் நாட்டு வெளிவிவகார அமைச்சர் உறுதி

(கொழும்பு)

இலங்கையின் ஒற்றுமைப்பாட்டைப் பாதுகாக்கப் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக ஈரானின் வெளிவிவகார அமைச்சர் மொணாச்சோ மொட்டாச்சி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நிலவும் மோதல்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு ஈரான் தயாராகவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஈரானுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம நேற்று அந் நாட்டு வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் (06 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ருவாண்டாபோல் தீர்வு கிடைக்கும்

### அந் நாட்டு பேராயர் நம்பிக்கை

(மட்டக்களப்பு)

ருவாண்டாவில் 40 வருடகால இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டது போல் இலங்கை இனப்பிரச்சினைக்கும் ஓர் தீர்வு ஏற்படும் என ருவாண்டாவின் அங்கிலிக்கன் திருச்சபையின் பேராயரும் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர் நலன்கள் குறித்த ஆய்வாளருமான அலக் ஹீஸ் பிரின் ரபுகாவ தெரிவித்தார்.

மட்டக்களப்புக்கு 4 நாள் விஜயம் ஒன்றினை மேற்கொண்டு அங்குசென்றிருந்தபோது நேற்று இதனைத் தெரிவித்தார். மட்டக்களப்பில் பல சமயத் தலைவர்களைச் சந்தித்த அவர், மயிலம்பாவெளி நலன்புரி நிலையத்திற்கு நேரடியாகச் சென்று இடம்பெயர்ந்துள்ள மக்களின் நலன்களைக்

இலங்கையில நிலவும மோதலகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு ஒத்துழைப்பு

அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் (06 ஆம் பக்கம் பார்க்க)

சிறுவர் நலன்கள் குறித்த ஆய்வாளருமான அலக் ஹீஸ் பிறின்டா பகாவு தெரிவித்தார்.

பெயர்ந்துள்ள மக்களின் நலன்களைக் கேட்டறிந்துள்ளார். (06 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தளபதி தலதாமாளிகை விஜயம்

(கொழும்பு)

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா கண்டி ஸ்ரீ தலதாமாளிகைக்குச் சென்று வழிபட்டதுடன் கண்டி மல்வத்த பௌத்த பீடத்திற்கும் அஸ்கிரிய பீடத்திற்கும் சென்று ஆசி பெற்றுள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை தலதாமாளிகைக்குச் சென்ற சரத் பொன்சேகாவிடம் மகாநாயக்க தேரர் வடக்குக் கிழக்குப் பாதுகாப்பு நிலைவரம் தொடர்பில் கேள்வி எழுப்பிய போது; வடக்குக் கிழக்கில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டு மக்கள் மீளக் குடியேற்றப் படுகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.(ச–5)

# விமானப் பாதுகாப்பு நிலைகளைத் தகர்த்த பின்னர் எதிர்ப்பு ஆயுதங்களைப் புலிகள் கைப்பற்றிவிட்டனர்

## நெடுந்தீவுத் தாக்குதல் குறித்து இந்தியப் பாதுகாப்பு ஆய்வாளர் இராமன்

(சென்னை)

விமானப் பாதுகாப்பு நிலைகளைத் தகர்த்து அழித்து விமான எதிர்ப்பு ஆயுதங்களை கைப்பற்றவே விடுதலைப்புலிகள் நெடுந்தீவுக் கடற்படைத் தளத்தைத் தாக்கியதாக பிரபல இந்தியப் பாதுகாப்பு ஆய்வாளர் பி. இராமன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து இந்தியப் பாதுகாப்பு ஆய்வாளர் பி.இராமன் தனது ஆய்வுச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

விடுதலைப்புலிகள் கடந்த 24 ஆம் திகதி நள்ளிரவில் யாழ்.குடாநாட்டின் தனித்துள்ள நெடுந்தீவுக் கடற்படைத் தளத்தின் மீது தாக்குதல் நடத்தி அங்கு அமைக்கப்பட்டிருந்த விமான எதிர்ப்புப் பாதுகாப்பு நிலைகளைத் தகர்த்து அழித்து இரண்டு விமான எதிர்ப்பு துப்பாக்கிகளையும் அதற்குரிய ரவைகளையும் இரண்டு இஸ்ரேலிய இயந்திரத் துப்பாக்கிகளையும் றொக்கெற் கிரனேற் லோஞ்சர்களையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

இத் தாக்குதலைக் (06 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அடுத்த மாதம் இலங்கை வருகிறார்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அடுத்த மாதம் இலங்கை வரவுள்ளார். இது தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அவர் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

சந்திரிகாவுக்கான பாதுகாப்பு மற்றும் சலுகைகளை உயர் நீதிமன்றம் குறைத்து விட்டுள்ள நிலையில் தனது பயணம் தொடர்பில் அவர் ஜனாதிபதிக்குக் கடிதம் அனுப்பி வைத்துள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இலங்கை திரும்பும் அவர் அரசியலில் (06 ஆம் பக்கம் பார்க்க)

## தற்கொலைத் தாக்குதல் படகு மட்டு.வில் இராணுவத்தால் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு களப்புப் பகுதியில் தற்கொலைத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்படும் படகு ஒன்றை இராணுவம் கைப்பற்றியுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

அத்துடன் நான்கு கிளைமோர் உட்பட பெருமளவிலான வெடிபொருள்களும் மீட்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை திருகோணமலை இலுப்பைக்குளம் பிரதேசத்தில் கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் விடுதலைப்புலிகளின் இரண்டு உறுப்பினர்கள் கொல்லப்பட்டதாகப் பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

நேற்று அதிகாலை இடம்பெற்ற இத் தாக்குதலில் தமிழீழ விடுதலைப்புலிகளின் புலனாய்வுப் பிரிவு (06 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் திருட்டுச்சம்பவம் அதிகரிப்பு

மானிப்பாய் சங்கரப்பிள்ளை வீதியில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் வீடொன்றில் நான்கு இலட்சம் மதிக்கத்தக்க நகைகள் திருட்டுப் போயுள்ளதாக மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டை உடைத்துக் கொண்டு வாள்கள் பொல்லுகளுடன் உள் நுழைந்த முகமூடி அணிந்த திருடர்கள் வீட்டில் உள்ளவர்களை பயமுறுத்தி இரண்டு கையடக்கத் தொலை பேசிகள் மற்றும் நகைகளை திருடிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக நேரில் சென்று மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை நடத்தியுள்ளனர். இச் சம்பவத்தை தொடர்ந்து நவாலி கிழக்கில் வீடொன்றில் திருட முற்பட்ட போது வீட்டில் உள்ளவர்கள் சத்தம் போட்டதனையடுத்து வயோதிபர் ஒருவரையும் பெண் ஒருவரையும் பொல்லுகளால் தாக்கிக் காயப்படுத்திவிட்டு சென்றுள்ளனர்.

காயமடைந்த பெண்மணி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. அதேவேளை கடந்த 17 ஆம் திகதி நள்ளிரவு நவாலி முருகமூர்த்தி கோவில் வீதியில் உள்ள வீடொன்றில் நான்கு இலட்சத்து 30 ஆயிரம் பெறுமதியுள்ள நகைகள் திருடர்களால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகவும் மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக மானிப்பாய் பொலிஸ் பிரிவில் நடைபெற்று வரும் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக பொலிஸாரிடம் கேட்டபோது ஒவ்வொரு சனிக்கிழமை நள்ளிரவும் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுவதாகவும் திருடர்கள் வீட்டில் உள்ளவர்களைக் கொண்டே பொருட்களை வாங்கிச் செல்வதனால் கைரேகைபோன்ற தடயங்களை பெற்றுக்கொள்ள முடியவில்லை எனவும் தெரிவித்த மானிப்பாய் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி அன்வர் இத் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையோர் அப் பகுதியைச் சேர்ந்தவர்களாக இருக்கலாமென தாம் சந்தேகிப்பதாகவும் தெரிவித்தார். (ச-5)

# நாய்களுக்குத் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையினால் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி இன்றும் நாளையும் குருநகர் பகுதியில் வைத்துப் போடப்படவுள்ளது.

இன்று காலை 8.30 மணிக்கு கிறீன் பீல்ட் சனசமூக நிலையத்திலும்,11 மணிக்கு கிறீன் கிங்ஸ் சனசமூக நிலையத்திலும் பிற்பகல் 2மணிக்கு யூபிலி மகப்பேற்று நிலையத்திலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

மேற்குறிப்பிட்ட நேரங்களில் முறையே நாளை குருநகர் புதுமை மாதா சனசமூக நிலையம்,குருநகர் சனசமூக நிலையம் மற்றும் உயர் நீதிமன்ற வளாகம் ஆகிய பகுதிகளில் ஏற்றப்படவுள்ளது. (ச)

# மன்னார்,வவுனியா பகுதிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் கடமைக்குத் திரும்பவேண்டும்

## கல்வி அமைச்சர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மூன்று மாவட்டங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மாத்திரமே தற்காலிக இணைப்புக்களை வழங்குமாறு கல்வியமைச்சர் சுசில் பிரேம் ஜெயந்த பணிப்புரை விடுத்துள்ளார் என அமைச்சின் செயலாளர் எஸ். தில்லை நடராஜா வலம்புரிக்குத் தெரிவித்தார்.

மன்னார்,வவுனியா மாவட்டங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு போக்குவரத்து சிக்கல் இல்லாததால் அவர்கள் நிரந்தர நியமனம் வழங்கப்பட்ட பாடசாலைகளுக்கு பணிக்குத் திரும்ப வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையால் போக்குவரத்து சிக்கல்கள் காரணமாக யாழ்ப்பாணம்,கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் பணிபுரியும் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு மாத்திரமே தற்காலிக இணைப்பு வழங்க முடியும் எனவும் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.தில்லை நடராஜா குறிப்பிட்டார்.ஏனைய மாவட்டங்களை சேர்ந்தோர் பணிக்கு உடனடியாக திரும்பவேண்டுமெனவும் அவர் கூறினார். (ச)

# இந்தியாவிலுள்ள அகதிகள் குறித்து பிரதமருடன் பேச ஜே.வி.பி.திட்டம்

இந்திய அகதி முகாம்களில் உள்ள இலங்கைத் தமிழர்கள் தொடர்பாக பிரதமர் ரட்ணசிறியுடன் பேச்சு நடத்தியுள்ளதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது. இந்தியாவில் உள்ள அகதிகளின் பிரஜாவுரிமை தொடர்பாகவே தாம் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் கூறியுள்ளார்.

இந்தியாவில் 28 ஆயிரத்து 500 இலங்கையர்கள் எந்தவொரு பிரஜாவுரிமையும் பெறாத நிலையில் வாழ்ந்து வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இப் பிரச்சினைகளுக்கு பொறுப்பாகவுள்ள அமைச்சராக பிரதமர் உள்ளதனால் இது தொடர்பாக பிரதமருக்கு எடுத்துரைக்கவுள்ளதாக இலங்கை அகதிகளின் வாழ்க்கையில் ஓர் மாற்றத்தினையும் மாறாக அவர்களுக்கு இலங்கை பிரஜாவுரிமை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ளபோது அம் மக்களினை சந்தித்து உரையாடியபோது அவர்களினால் தெரிவிக்கப்பட்ட பல விடயங்கள் தொடர்பாக பிரதமரிடம் எடுத்துரைக்க வேண்டியுள்ளதாக தெரிவித்த இராமலிங்கம் சந்திரசேகரன் இது தொடர்பாக பிரதமரிடம் எடுத்து கூறுவதற்கான சந்தர்ப்பத்தினை பெற்றுத்தரும்படி கடிதம் மூலம் தெரிவித்துள்ளதாக குறிப்பிட்டார். (ச-3)



பதில் பிரதம நீதியரசராக நிஹால் டி சில்வா, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்வதை படத்தில் காணலாம்.

# பால்மாக்களின் விலை இந்த வாரம் அதிகரிப்பு

(கொழும்பு)

பால்மா வகைகளின் விலைகளை இந்த வாரம் அதிகரிப்பதற்கு நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை மற்றும் வர்த்தக நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை என்பன ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

450 கிராம் நிறையுள்ள ஒரு பால்மா பக்கற்றின் விலை 50 சதத்தால் அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. பால்மா வகைகளை இறக்குமதி செய்வோரும் உற்பத்தியாளர்களும் அடுத்த வாரத்திற்குள் இவ் அதிகரிப்பை மேற்கொள்வதற்கு அனுமதி கேட்டுள்ளனர்.

பால்மாக்களின் விலை உலக சந்தையில் அதிகரித்துள்ளமையும் அவுஸ்திரேலியாவில் ஏற்பட்டுள்ள வரட்சி காரணமாக பால்மாக்களின் விலை அதிகரித்துள்ளது.

அத்துடன் நாட்டில் தற்போது அதிகரித்து வரும் எரிபொருள் விலையேற்றத்தால் மின் கட்டணங்களின் அதிகரிப்பு பால்மா உற்பத்தி இறக்குமதிச்செலவு அதிகரிப்பு என்பவற்றினாலேயே பால்மாக்களின் விலையை அதிகரிப்பதற்கு அனுமதி கோரியுள்ளனர்.

பால்மாக்களின் விலையை அதிகரிக்க அனுமதிக்காவிடின் விற்பனையை நிறுத்தப் போவதாக இறக்குமதியாளர்களும் உற்பத்தியாளர்களும் அரசாங்கத்தை எச்சரித்துள்ளனர். (ச-5)

# தேர்தல் திருத்தச்சட்ட வரைபு யூன் முதல் வாரத்தில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

தேர்தல் திருத்தச் சட்ட இறுதி வரைபு யூன் முதல் வாரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென பாராளுமன்றக் குழுத்தலைவர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.தேர்தல் திருத்தச்சட்ட வரைபு நாட்டின் நீண்ட கால நலனை கருத்திற் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

திருத்தச்சட்ட வரைபிற்கு பாராளுமன்றக் குழுவில் இடம்பெறும் 31 உறுப்பினர்களில் 20 உறுப்பினர்களின் ஆதரவுள்ளது எனினும் ஐக்கியதேசியக்கட்சி, மலைய மக்கள் முன்னணி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஐக்கிய தேசியக்கட்சியின் அதிருப்பதியாளர்கள் குழுவில் நான்கு உறுப்பினர்கள் உள்ளிட்டோர் எதிர்த்துள்ளதாகவும் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். (ச-5)

# தீர்வுத்திட்டத்தை சமர்ப்பிக்கும் யோசனை ஜே.வி.பியிடம் இல்லை

## சர்வகட்சிக்குழுத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வகட்சிக்குழுவிற்கு கிடைக்கப்பெற்ற தீர்வுத்திட்ட வரைபுகளைக் கொண்டு எதிர்வரும் சில வாரங்களில் சர்வகட்சி மகாநாட்டைக்கூட்டவுள்ளதாக குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணி தவிர்ந்த 13 கட்சிகள் இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தை சமர்ப்பிக்குமென அவர் குறிப்பிட்டார். இதுவரை சிறிலங்கா சுதந்திரக்கட்சி உட்பட 11 அரசியல் கட்சிகள் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவிடம் தமது தீர்வுத்திட்டத்தை சமர்ப்பித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தனியான தீர்வுத்திட்டத்தை முன்வைக்காதபோதும் தன்னால் முன்வைக்கப்பட்ட தீர்வுத்திட்ட வரைபை ஆதரிப்பதாக தெரிவித்துள்ளதாகவும் பேராசிரியர் திஸ்ஸ விதாரண கூறினார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தீர்வுத்திட்ட வரைபின் பிரதியை தம்மிடம் வழங்கும் போது தமது தீர்வுத்திட்டத்தை முன்வைப்பதாக ஜாதிக ஹெல உறுமய சர்வகட்சிக்குழுவிடம் தெரிவித்துள்ளது.

இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தை முன்வைப்பதற்கு இதுவரை மக்கள் விடுதலை முன்னணி தீர்மானம் எதனையும் மேற்கொள்ளவில்லையெனவும் பேராசிரியர் திஸ்ஸ விதாரண குறிப்பிட்டார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தீர்வுத்திட்டத்தை பெரும்பாலான கட்சிகள் ஆதரிக்கும்போது ஜாதிக ஹெல உறுமய விமர்சித்துள்ளதாகவும் நாட்டின் இனப்பிரச்சினைத் தீர்வு ஒற்றையாட்சியும் பௌத்தமத மேலாதிக்கமும் கொண்டதாக அமையவேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளது. (ச-5)

# மனித உரிமை மீறல்களை தடுக்காவிட்டால் அனைத்து உதவிகளும் நிறுத்தப்படவேண்டும்

## ம.உ.கண்காணிப்பகம் வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கையில் மகிந்த ராஜபக்ஷ அரசு மனித உரிமை மீறல்களை தடுக்காது போனால் அரசுக்கான சர்வதேச உதவிகளை அந்த நாடுகளின் ஊடாக தடுத்து நிறுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்போவதாக நியூயோர்க்கைத் தளமாகக் கொண்ட மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பின் ஆசியப் பிராந்திய இயக்குநர் பிராட் அடம்ஸ் தெரிவித்துள்ளதாவது; எமது அமைப்பு இலங்கை தொடர்பான விடயங்களில் செயல்திறனுள்ள நாடுகளான அமெரிக்கா,பிரித்தானியா,இந்தியா, யப்பான் உட்பட பல நாடுகளுடன் இலங்கையிலுள்ள தற்போதைய நிலை தொடர்பாக தொடர்புகளை கொண்டுள்ளது.

எனினும் நாம் இலங்கைக்கான உதவிகளை நிறுத்தும்படி அவர்களை இன்றுவரை கோரவில்லை. மனித உரிமைகள் தொடர்பாக கொழும்பு மீது அதிக கவனத்தை செலுத்தி அங்கு சட்ட ஒழுங்கை நிலைநாட்ட சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

மனித உரிமைகளை மதிப்பதற்கும் பொதுமக்களின் மீதான வன்முறைகளை குறைப்பதற்கும் இணைத்தலைமை நாடுகளும், ஏனைய நாடுகளும் அரசு மற்றும் விடுதலைப்புலிகள் மீது அழுத்தங்களை மேற்கொள்ள வேண்டும்.

நிதி உதவியானது இத்தகைய அழுத்தங்களில் ஒன்று. சில நாடுகள் இந்த வழியில் செல்வதற்கு தற்போது தீர்மானித்துள்ளன.

மனிதாபிமான உதவிகளை நிறுத்துவதை நாம் எதிர்க்கின்றோம். ஏனெனில் அது பொதுமக்களை பாதிக்கலாம். எனினும் துரதிஷ்டமாக சர்வதேச சமூகத்தினால் மேற்கொள்ளப்படும் தற்போதைய அணுகுமுறைகள் அங்கு நடைபெறும் பல வந்தமாக காணாமல் போகச் செய்தல், கடத்தல்கள், எழுந்தமானமாக தடுத்து வைத்தல், கண்மூடித்தனமான வான் குண்டுவீச்சுக்கள்,பலவந்தமாக மீளக்குடியமர்த்துதல் ,ஊடகத்துறையின் மீதான கட்டுப்பாடுகள் போன்றவற்றில் சிறிய தாக்கத்தையே உண்டுபண்ணியுள்ளது என்றார் அவர். (ச)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை தென்கோவை அருள்மிகு கற்பகப் பிள்ளையார் வருடாந்த மஹோற்சவம் நேற்று காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

எதிர்வரும் யூன் மாதம் 10 ஆம் திகதி காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 11 ஆம் திகதி காலை 11 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறவுள்ளதாக ஆலய பரிபாலனசபை அறிவித்துள்ளது. (ச-127)

# பேராசிரியர் சந்திரசேகரம் நினைவுப்பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் பேராசிரியர் சந்திரசேகரம் நினைவுப் பேருரை எதிர்வரும் 3 ஆம் திகதி மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் 'கணிதக் கல்வியும் மொழிப்பிரயோகங்களும்' என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி நினைவுப்பேருரையை ஆற்றவுள்ளார். (ச)

# தரை வழி யுத்தமும் ஊடக யுத்தமும்

☞ நெடுந்தீவு தாக்குதல் பற்றிய செய்தி வெளியீடுகள் அவற்றின் நம்பகத் தன்மையை வெகுவாக சந்தேகத்திற்கிட மாக்கியுள்ளன.

☞ பிரகடனப்படுத்தாத யுத்தத்தி னால் ஏற்பட்ட பயம் இரகசியமாக பல பில்லியன்கள் பெறுமதியான கொள் வனவுகள் செய்யும் அளவிற்கு மாற் றியுள்ளது.

☞ றெக்கிளமேசன் வீதியில் இடம் பெற்ற குண்டுவெடிப்பு இராணுவ வாக னத்திற்கா? அன்றி வேறு எதையா வது இலக்கு வைத்து நடத்தப்பட்டதா?

கடந்த வியழக்கிழமை நெடுந்தீவு பற் றிய செய்தி சர்வதேசத்தின் கவனத்திற்குள் ளாகியது. உதயத்திற்கு முன் விடத்தல்தீவு, பூநகரிப் பகுதியில் இருந்து பல படகுகளில் வந்த விடுதலைப் புலிகள் கடற்படையின ரின் உதவித் தளத்தை கைப்பற்றி மூன்று மணித்தியாலங்கள் வரை அங்கு நிலை பெற்றிருந்தனர்.


அதன் பின்னர் விடிந்ததும் கடற்படையி னர் பல இயந்திரத் துப்பாக்கிகள் , படகுகள், ஹெலிகொப்ரர் ஆகியவற்றின் உதவியுடன் புலிகளால் கைப்பற்றப்பட்ட தளத்தை மீளக் கைப்பற்றியுள்ளனர்.

புலிகள் கடற்படையினரிடம் இருந்து கைப்பற்றிய ஆயுதங்களுடன் தப்பிச் சென்ற னர். இச் சந்தர்ப்பத்தில் கடற் புலிகளின் இரண்டு படகுகள் அழிக்கப்பட்டன.

இதே நேரத்தில் வியாழக்கிழமை காலை கொழும்பில் றெக்கிளமேசன் வீதியில் ஓர் நாடகம் நடாத்தப்பட்டது.

இது பற்றிய தகவல்கள், தேசிய பாது காப்பு ஊடக மத்திய நிலையத்தினால் மிகு வேகமாக உள்நாட்டு , வெளிநாட்டு செய்தி ஊடகங்களுக்கும் பரப்பப்பட்டது.

இதில் இறந்தோர் எண்ணிக்கையை மாற்றி மாற்றி கூறினார்கள். முதலில் கடற் படை வீரர்களின் ஆறு சடலங்கள் காணப்



பட்டதாகவும் பின்னர் எண்ணிக்கை ஏழு என் றும் கூறப்பட்டது.உடனடியாக பாதுகாப்பு ஊடக மத்திய நிலைய அதிகாரிகள் வருத் தத்துடன், கடற்படைத் தலைமையதிகாரி யின் தகவல்களின் படி நான்கு கடற்படையி னர் இறந்ததாகவும் நால்வர் காயமடைந்த தாகவும் மேலும் ஐவர் மற்றைய படைத்தளத் தில் சரணடைந்துள்ளதாகவும், அவ்வாறே காணாமற் போனவர்களும் திரும்பியுள்ள தாகவும் கூறினார்கள். இதேவேளை கடற் படைப் பேச்சாளரினால் வேறுபட்ட எண்ணிக் கைகள் கூறப்பட்டன.

அதாவது தங்களால் அழிக்கப்பட்ட கடற் புலிகளின் படகுகளின் எண்ணிக்கை என்று அவர்களால் வெளியிடப்பட்டது உண்மை யில் தாக்குதலில் ஈடுபட்ட படகுகளின் எண் ணிக்கையிலும் மிகவும் கூடியதாகும்.

உரிய கடற்படை அதிகாரிகளிடம் விசா ரித்ததில் கடற்படையினரின் பெயர்கள் குறிப் பிட்டு அவர்கள் இறந்துள்ளதாக தெரிவித் தனர். இவைகளிலிருந்து தெரியவருவது கடற்படையதிகாரிகள் தம்மால் மீள விடு விக்க வேண்டிய பகுதியைக் கைப்பற்றுவதற்கான படை நடவடிக்கையை மட்டும் வழிநடத்துவது டன் நின்றுவிடாது மாறுபட்ட செய்திகளை இலங்கை மக்களுக்கும், வெளி நாடுகளுக் கும் பரப்புவதிலும் ஈடுபட்டுள்ளனர் என்பதா கும்.

இவற்றில் இருந்து எனக்கு உறுதிப்படுத் தக் கூடியதாக இருப்பதாவது இலங்கையில் இரு வேறுபட்ட யுத்தங்கள் நடைபெறுகின்றன என்பதாகும். ஒன்று வடக்குக் கிழக்கில் இடம்பெறும் இராணுவ யுத்தம் . மற்றையது கொழும்பில் இடம்பெறும் ஊடக வெளியீடு களின் யுத்தம்.

இவ்விதம் கிழக்கில் இடம்பெற்ற தாக்கு தல் சம்பவங்களிலும் முரண்பாடான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.


உண்மைகள் வெளிப்பட்டதும் செய்தி ஊட கங்கள் பற்றிய பொதுமக்களின் எதிர்பார்ப் புகள் சிதைக்கப்படுகின்றன.

சில இடங்களில் பொதுமக்களின் அறிவை மட்டமாக்கும் முறையில் செய்திகள் வெளியாகின்றன. உதா ரணமாக கடற் படைத் தளத்தை நெருங்கிய தற்கொலைப் படகுகள் மற்றும் கடற்புலிகளின் படகுகளின் எண்ணிக்கைகள் திரும்ப திரும்ப கூறப்பட் டன.

இவர்கள் எவ்வாறு வேறுபடுத்தி கண்டு பிடித்தார்கள். படகுகளில் பெயரிடப்பட்டிருந் தனவா?

நெடுந்தீவில் தாக்குதல் நிகழ்ந்த ஒரு சில மணித்தியாலங்களுக்குள் வியாழக்கிழமை காலை கொழும்புத்துறைமுகத்தின் சுற்று மதிலை ஒட்டிச் செல்லும் றெக்கிளமேசன் வீதியில் மோட்டார் சைக்கிளில் பொருத்திய குண்டு ஒன்று வெடிக்க வைக்கப்பட்டு, ஓர் இராணுவ பஸ் வண்டி சேதத்திற்குள்ளானது. இதில் ஒரு இராணுவவீரர் கொல்லப்பட்டதுடன் மூன்று இராணுவத்தினரும் மூன்று பொது மக்களும் காயமடைந்துள்ளனர்.

இக் குண்டு வெடிப்பின் இலக்கு இராணுவ வண்டி தானா என்பது தெளி



வாக வில்லை.

புலனாய்வுப் பிரிவினர் இக்குண்டு ஓர் கொரில்லா தாக்குதலாளியால் தன்னியக்க கருவி மூலம் வெடிக்க வைத்திருக்க வேண் டும் என்று கருதுகின்றார்கள்.

கோட்டைப்பிரதேசத்தில் உள்ள சோதனை நடவடிக்கைகளுக்கு பயந்து இலக்கினை அடைய முன்னர் வெடிக்க வைத்திருக் கலாம் என நம்பப்படுகின்றது.

இதன் நோக்கம் துறைமுகத்தினுள் ளிருந்து வெடிபொருட்களை ஏற்றிக்கொண்டு வாகனம் வெளியேறும் போது அதனை இலக்கு வைத்து வெடிக்க வைப்பதற்காகவோ அன்றி ஏதாவ தொரு முக்கியஸ்தரை இலக்கு வைத்து வெடிக்க வைப்பதற்காகவோ எதிர் பார்த்திருக்கலாம் என நம்பப்படுகின்றது.

கடந்த வியாழன் நடந்த இரு சம்பங்கள் விடுதலைப் புலிகள் புதிய தாக்குதல்களுக்கு வரிந்து கட்டிக்கொண்டுள்ளமையைத் தெளி வாக எடுத்துக்காட்டுகின்றன.

இந்நிகழ்வுகள் பாதுகாப்புப்படைகள் , வடக்கிலும் கிழக்கிலும் போராளிகளின் நிலை களின் மீது மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல் களை ஆரம்பித்துள்ள வேளையில் இடம் பெற்றுள்ளன.

அரசாங்கம்ரஷயாவிடம் இருந்து நீண்ட கால கடன் அடிப்படையில் மிக் 29 எஸ்.எம் பன முகத்தன்மை கொண்ட விமானத்தை யும் பயிற்றுவிப்பாளரையும் பெறுவதற்கு முயல்கிறது.

இது பெரிய சர்ச்சையைக் கிளப்பியுள் ளது. எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி இது பற்றி விவாதம் நடத்தக் கோரியுள்ளது.

இருந்த போதிலும் ஜனாதிபதி தனது அர சாங்கம் இவற்றைக் கொள்வனவு செய்ய விரும்புவதாக தனது அமைச்சர்களுக்குக் கூறியுள்ளார். இவற்றைவிட மூன்று புதிய எம்.ஐ. 35எம்.ஹெலிகொப்ரர்களை வாங்க வுள்ளதாகவும் விமானப் படையிடம் உள்ள நான்கு எம். ஐ 24 ஹெலிகொப்ரர்களையும் தர முயர்த்தவுள்ளதாகவும் விமானப்படைத் தரப்பு உறுதிசெய்துள்ளது. இவை பெருந்த செலவினை ஏற்படுத்தும் என்பதில் சந்தேக மில்லை.

மிக் 29 மற்றும் அதனுடன் இணைந்த வைகள் தொடர்பான நடவடிக்கைகள் புதி தாக உருவாக்கப்பட்ட லங்கா லொஜிஸ்ரிக் அன்ரெக்னோலஜிஸ் லிமிடெட்டால் செய் யப்படவேண்டும். அந்நிறுவனத்தின் பிரதான நோக்கம் தரை, கடல், விமானம், பொலிஸ் படை மற்றும் அரசி னால் அறிவிக் கப்படு கின்ற அரசநிறுவனங் களுக்கு உபகரணங் களைவழங்குவதாகும்.

இந்த கொம்பனி யானது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாது காப்பு மற்றும் சட் டம், ஒழுங்கு அமைச்சர் என்ற வகையில் கொண்டு வந்த முன்மொழிவுக்கு அமைச் சரவை அனுமதியளித்ததன் மூலம் உருவாக் கப்பட்டதாகும்.

இருந்த போதிலும் அரசின் நடைமுறைக ளில் இருந்து விலகிச் செயற்படுவதற்கான அனுமதி எதையும் அமைச்சரவை அதற்கு வழங்கவில்லை.

மேலும் இதுவரை பிரகடனப்படுத்தப் படாத ஈழப்போரானது உச்சக் கட்டத்தை அடைவது மட்டுமல்லாது ஓர் பயங்கரமான நிலையை அடைகின்றது. பல பில்லியன் கணக்கான இராணுவ உபகரணங்கள் பாதுகாப்பு அமைச்சர் கோத்தபாயவுக்கு பங்குள்ள வெளி யார் கம்பனியிலிருந்து கொள்வனவு செய்யப் படுகின்றது. போரின் விலையானது மிக உயர்ந்துள்ளது.

இந்த நான்காவது ஈழப்போர் பொதுமக் களை அதிக பொருளாதார நெருக்கடிகளை சந்திக்க வைக்கப்போகின்றது. கடைசியில் அரசு செய்ய வேண்டியது யாதெனில் தாக் குதல் சம்பவங்களின் உண்மை நிலையை வெளிப்படுத்தி மக்களின் ஆதரவைப் பெறு தலாகும்.

இராணுவத் தலைமைகள் தங்களுடைய நன்மைகளைப் பெறும் பொருட்டு சிலவற் றைச் செய்யலாம். தேசிய மட்டத்தில் இவை விவாதத்துக்குட்படுத்தப்பட வேண்டும்.

இவை அரசாங்கத்தின் கைகளிலேயே தங்கியுள்ளதல்லாமல் இராணுவ தலைமை களின் கைகளில் அல்ல. இதன் விளைவுகள் முடிவில் ஜனாதிபதி ராஜபக்ஷவின் அரசாங் கத்தையே தாக்கும். களத்தில் போராடும் போர் வீரர்கள்தான் உயிரிழப்பார்கள். தலைமை கள் அல்ல. நெடுந்தீவுத் தாக்குதல் அரசாங் கத்துக்கு ஒரு பாடமாக அமைய வேண்டும். அரசு இதனை அசட்டை செய்ய முடியாது.

**ஆய்வு: இக்பால் அத்தாஸ்**


## பதவி வெற்றிடங்கள்

✦ **கணனி இயக்குநர்கள்**

(ஆண்கள், இரவுக் கடமை)

(தமிழில் ரைப்பிங் செய்து பக்கம் அமைக்கும் அனுபவம் உடையவர்கள் மாத்திரம்)

✦ **அலுவலகச் செய்தியாளர்கள்**

(ஆண்கள்,வெளிக்களம்)

(தகைமை:- க.பொ.த.உயர் தரத்தில் சித்தி, முன்னனுப வம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்)

✦ **மொழி பெயர்ப்பாளர்**

(ஆண்கள்,இரவுக் கடமை)

(ஆங்கிலம்-தமிழ்)

✦ **பத்திரிகை மடிப்பவர்கள்**

(முன்னனுபவமுள்ளவர்கள்)

**பொதுத் தகைமை**

❖மேற்குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர் கள் யாவரும் யாழ்.நகர மையத்திலிருந்து 6 கி.மீ. தூரத் திற்குள் வசிப்பவர்களாக இருத்தல் வேண்டும்.

❖தகைமையுடையோர் பிற்பகல் 3 மணிமுதல் மாலை4.30 மணிவரையில் அலுவலகத்திற்கு நேரில் வரவும்.

நிர்வாக உத்தியோகஸ்தர்,
வலம்புரி.




ஈராக்கில் நஜப் என்னுமிடத்தில் வாழும் கலை தலைவர் ரவிசங்கர் , ஷியா தலைவர் அயாட்லொல்லா முகமதுவை சந்தித்த காட்சி.

## இன்று ஒரு தகவல்

# இரவில் வெளிச்சம் !

(நபிகள் நாயகம் சொன்ன கதை)

ஓர் ஊரிலே ஒருவர் இருந்தார். மிகவும் நல்லவர். யாருக்காவது ஏதாவது கொடுத்துக்கொண்டே இருப்பார். கொடையாளி !

தினமும் யாராவது ஒருவருக்கு ஏதாவது கொடுக்கா விட்டால் அவருக்குத் தூக்கம் வராது. அப்படி ஒரு பழக்கம்.

அது மட்டுமல்ல... அவர் கொடுப்பது அடுத்தவர்களுக்குத் தெரியாது... அவ்வளவு இரகசியமாகக் கொடுப்பார். வலது கை கொடுப்பது இடது கைக்குத் தெரியக்கூடாது என்று சொல்கிறோம் அல்லவா?... அது மாதிரி அவர்.

ஒரு நாள் இரவு அவர் ஏற்கனவே கட்டி வைத்திருந்த பணமுடிப்பைக் கையிலே எடுத்துக்கொண்டு வெளியே வந்தார்.

இன்றைக்கு யாருக்குத் தர்மம் செய்வது என யோசித்துக் கொண்டே இருட்டிலே நடந்துகொண்டிருந்தார்... யாரோ ஒருவர் எதிரே வருவது தெரிந்தது. உடனே அவரை நெருங்கினார். தன்னிடமிருந்த பணமுடிப்பை அவசர அவசரமாக அவர் கையிலே திணித்துவிட்டுத் திரும்பி வந்துவிட்டார்.

'அப்பாடா... ஒரு வழியாக யாருக்கும் தெரியாமல் இன்றைக்குத் தர்மம் பண்ணியாச்சு!' என்கிற மகிழ்ச்சி. மன நிறைவு... நிம்மதியாகத் தூங்கியெழுந்தார். மறுநாள் காலையிலே ஊர் முழுவதும் ஒரே பேச்சு!

'நேற்று இரவு ஒரு திருடன் கையிலே யாரோ ஒருவர் பணத்தைக் கொடுத்துவிட்டுப் போனாராம்...'

இப்படியாக எல்லோரும் பேசிக் கொண்டார்கள்... இதைக் கேட்டதும் அந்தப் பெரியவருக்கு மிகவும் வருத்தமாகப் போய் விட்டது!

'அடடா... போயும் போயும் ஒரு திருடனுக்கா உதவி செய்தோம்? பிரயோசனமில்லாமல் போச்சே' என நினைத்தார்.

சரி... இன்றைக்குப் யாருக்காவது உதவி செய்வோம் என்று முடிவு பண்ணினார். அன்றிரவும் இவர் வழக்கம் போல தெருவிலே இறங்கி நடந்தார்... கையிலே பணமுடிப்போடு!

எதிரே ஒரு பெண் உருவம்... மங்கலாகத் தெரிந்தது. இவர் உடனே அந்தப் பெண்ணிடம் பணத்தைக் கொடுத்துவிட்டுத் திரும்பினார்.

மறுநாள் காலை ஊர் முழுவதும் என்ன பேசிக்கொண்டார்கள் தெரியுமா ?... 'நேற்று இராத்திரி நெறி தவறி நடக்கிற ஒரு பெண்ணின் கையிலே யாரோ பணத்தைக் கொடுத்து விட்டுப் போயிருக்கிறார்... என்ற பேச்சு...

அடடா... இன்றைக்கும் தவறு நடந்து போய்விட்டதே என்று வருத்தப்பட்டார் இருக்கட்டும் ...இன்றைக்கும் ஏதாவது தர்மம் பண்ணுவோம்' என நினைத்துக்கொண்டார்.

மூன்றாம் நாள் இராத்திரியும் புறப்பட்டார். அப்பொழுதும் ஒருவர் எதிரே வந்தார். அவரிடம் பணத்தைக் கொடுத்து விட்டார். மறுநாள் காலை மக்கள் பேசிக்கொண்டார்கள்... 'நேற்று இராத்திரி ஒரு செல்வந்தர் கையிலே யாரோ பணத்தைக் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறார்கள்...'

அவருக்கு மிகவும் வருத்தம். என்ன இது ? தினம் இப்படியாகிறதே ? ... என நினைத்துக் கொண்டு படுத்துத் தூங்கினார். அன்று இராத்திரி ஒரு கனவு. அந்தக் கனவிலே இறைவன் வந்து சொன்னாராம்... 'இதோ பாரப்பா... நீ கொடுத்த தர்மம் வீணாகப் போகவில்லை. உன்னிடம் பணம் வாங்கிய அந்தத் திருடன் திருந்திவிட்டான் அந்தப் பெண்ணும் திருந்திவிட்டாள். அந்தச் செல்வந்தனும் கொடையாளி ஆகிவிட்டான்' இந்தக் கதையைச் சொன்னவர் நபிகள் நாயகம். இதிலே உள்ள கருத்து என்னவென்றால்... நல்ல மனத்தோடு தர்மம் செய்தால் அது வீணாகப் போவதில்லை! இன்னொரு கருத்து... தர்மம் தன்னை மட்டுமல்ல... அடுத்தவர்களையும் தீமையில் இருந்து காப்பாற்றும்... இதுதான் நாம் புரிந்து கொள்ள வேண்டிய உண்மை!

இந்தக் காலத்திலேயும் இது மாதிரி சில சம்பவங்கள் நடப்பது உண்டு. ஒரு பெரியவர் இருட்டிலே நடந்துகொண்டிருந்தார். எதிரிலே வந்த ஒருவன் வலுக்கட்டாயமாக இவர் கையைப் பிடித்து... ஒரு பணமுடிப்பை கொடுத்து, இதை வைத்திருங்கள் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான். பெரியவருக்கு ஆச்சரியம்!

இந்தக் காலத்திலேயும்... இப்படி... வலது கை கொடுப்பது இடது கைக்குத் தெரியக்கூடாது என்று நினைக்கிற கொடையாளிகளும் இருக்கிறார்கள் என்று யோசித்துக் கொண்டே நடந்தார்.

கொஞ்சத்தூரம் போயிருப்பார்... அதற்குள்ளே அந்த ஆள் திரும்பி வந்தான். கொடுத்த பணமுடிப்பைத் தாருங்கள் என்று கேட்டு வாங்கிக் கொண்டான். இவருக்கு ஒன்றுமே புரியவில்லை. 'ஏன் இப்படிச் செய்கிறாய்...' என்று கேட்டார். அது ஒன்றும் இல்லீங்க... கொஞ்சநேரம் இதை உங்ககிட்ட கொடுத்து வைத்திருந்தேன்... அவ்வளவு தான்... என்றான். 'ஏன்?' என்று இவர் கேட்டார். 'என் பின்னால் போலீஸ் தேடிக் கொண்டு வந்துகொண்டிருந்தது... அதுதான் அப்படிச் செய்தேன்... இப்பொழுது போலீஸ் போய்விட்டது... இனிமேல் பயமில்லை... ! அப்படிச் சொல்லிவிட்டு அவன் பாட்டுக்கு நடந்தான்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## நினைவூட்டல் செய்திகள்

# அதிபர் சேவைக்கான நேர்முகத் தேர்வு ஜூன் இரண்டாம் வாரத்தில் நடைபெறும்

## யாழ்ப்பாணத்தில் நடத்தவும் ஏற்பாடு

(திருகோணமலை)

இலங்கை அதிபர் சேவை தரம் III தரம்IIற்கு இணைத்துக்கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் ஜூன் மாதம் இரண்டாவது வாரத்தில் நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக வட மாகாண கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா வலம்புரிக்குத் தெரிவித்தார்.

இந் நேர்முகப் பரீட்சைக்கு யாழ்.மாவட்டத்தில் மொத்தம் 540 பேரில்; யாழ்.கல்வி வலயத்தில் 210 பேரும்,வலிகாமம் கல்வி வலயத்தில் 130 பேரும், வடமராட்சி கல்வி வலயத்தில் 91 பேரும்,தென்மராட்சி கல்வி வலயத்தில் 74 பேரும் மற்றும் தீவகக் கல்வி வலயத்தில் 35 பேரும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நேர்முகப் பரீட்சைக்கு ஒரு நாளிற்கு 60 பேர் தோற்றவுள்ளார்கள் எனவும் யாழ்ப்பாணத்தில் 9 நாட்கள் நடைபெறவுள்ளதாகவும் வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் மேலும் கூறினார்.

இந் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றவுள்ளோர் பின்வரும் ஆவணங்களை கொண்டு வருவதுடன் அவற்றின் ஒவ்வொரு பிரதியை பரீட்சையின் போது நேரில் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் தெரிவித்த அவர், ஆவணங்களிற்கு புள்ளிகள் வழங்கப்படுமெனவும் குறிப்பிட்டார்.

ஆவணங்களின் விபரம் ,ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ், ஆசிரியராக முதல் நியமனம் பெற்ற கடிதம், பட்டதாரியாயின் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டச்சான்றிதழ்,டிப்ளோமாச் சான்றிதழ், 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2006 ஆம் ஆண்டுவரை கடமையின் போது பெறப்பட்ட லீவு விபரங்கள், முதலாம் திகதி ஜனவரி மாதம் 2007 ஆம் ஆண்டுக்கு முன்னரான 5 ஆண்டுகள் கடமையில் ஒழுக்காற்று நடவடிக்கையில் ஈடுபடவில்லை என்பதை உறுதிசெய்யும் வலயக்கல்விப் பணிப்பாளரின் கடிதம், கல்வித்துறை சார்ந்த ஆய்வுகள், கட்டுரைகள், செயற்திட்டங்கள் தயாரித்திருப்பின் அதிபர் அல்லது வலயக்கல்விப் பணிப்பாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்;

ஆங்கில மொழித் தேர்ச்சியை உறுதிப்படுத்த கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சை பெறுபேற்றுச் சான்றிதழ், 1990 ஆம் ஆண்டு முதல் 31 ஆம் திகதி டிசம்பர் 2006 ஆம் ஆண்டு வரை உள்ள காலப்பகுதியில் கஷ்ட பிரதேசத்தில் சேவையாற்றியது தொடர்பான அதிபர் அல்லது வலயக் கல்விப் பணிப்பாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ், பாடசாலை அபிவிருத்திக்கு நேரடியாக பங்களிப்புச் செய்தமை தொடர்பாக அதிபர் அல்லது வலயக் கல்விப் பணிப்பாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்;

கற்றல் ,கற்பித்தலிற்கு மேலதிகமாக பாடசாலை மாணவர்களின் அறிவு விருத்தி செய்வதற்காக பல்வேறு துறைகளில் செயற்பட்ட சேவையை அதிபர் அல்லது வலயக் கல்விப் பணிப்பாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்;

இதேவேளை வவுனியா,மன்னார் மாவட்டங்களில் ஜூன் 6 ,7 , 8 ஆம் திகதிகளிலும் மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்தில் 11 ஆம் திகதியும் நேர்முகப் பரீட்சையை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சின் வட மாகாணச் செயலாளர் எல்.இளங்கோவன் தெரிவித்தார்.

எனினும் தற்போது ஏ-9 வீதி ஓமந்தைச் சோதனைச் சாவடி மூடப்பட்டுள்ளமையால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிற்கான நேர்முகப் பரீட்சையை திட்டமிட்டபடி நடாத்துவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

*(நேற்று பிரசுரிக்கப்பட்ட இச் செய்தி தகவலுக்காக மீண்டும் பிரசுரிக்கப்படுகின்றது)* (ந-5)

## கல்வியியல் கல்லூரியில்

# டிப்ளோமா முடித்தவர்களுக்கு அடுத்த மாதம் நேர்முகப்பரீட்சை

(கொழும்பு)

கல்வியியற் கல்லூரிகளில் இருந்து டிப்ளோமா முடித்து வெளியேறிய வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 251 பேருக்கு அடுத்த மாதம் முற்பகுதியில் ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சை நடைபெறுமென வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் தெரிவித்தார்.

இவர்களில் யாழ்ப்பாணத்தில் 137 பேரும் அம்பாறையில 9 பேரும, வவுனியாவில் 46 பேரும் கிளிநொச்சியில் 8 பேரும், முலலைத்தீவில் 21 பேரும், மன்னாரில் 11 பேரும்,திருகோணமலையில் 9 பேரும் மற்றும் மட்டக்களப்பில் 10 பேருமாக 251பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளதாகவும் இதில் 2 பேர் சிங்கள மொழி மூலமானவர்கள் எனவும் அவர் குறிப்பிட்டார். *(நேற்று பிரசுரிக்கப்பட்ட இச் செய்தி தகவலுக்காக மீண்டும் பிரசுரிக்கப்படுகின்றது)* (ந-5)

# சகல வெளிமாவட்ட ஆசிரியர்களுக்கும் தற்காலிக நியமனம் வழங்கப் பணிப்பு

(கொழும்பு)

யாழ்.மாவட்டத்தில் தங்கியுள்ள சகல வெளி மாவட்ட ஆசிரியர்களுக்கும் தற்காலிக இணைப்பை வழங்குமாறு 5 வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.தில்லைநடராஜா எழுத்து மூலமாக அறிவுறுத்தியுள்ளார்.

கடந்த ஓகஸ்ட் 11 ஆம் திகதிக்குப் பின்னர் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் போக்குவரத்துப் பிரச்சினைகள் காரணமாக வெளி மாவட்டங்களில் பணி புரியும் ஆசிரியர்கள் பணிக்குச் செல்ல முடியாத நிலையில் யாழ். மாவட்டத்தில் தங்கியுள்ளனர்.

இந் நிலையில் போக்குவரத்துப் பிரச்சினைகள் சீராகும் வரை அவ் ஆசிரியர்களுக்கு அவர்கள் தங்கியுள்ள இடங்களில் தற்காலிக இணைப்பு வழங்குமாறு கல்வி அமைச்சு மாகாணக் கல்வி அமைச்சுக்கு அறிவித்திருந்தது.

எனினும் யாழ்.மாவட்டத்தில் முழுமையாக அந் நியமனம் வழங்கப்படாத நிலையில் தற்காலிக இணைப்புப் பெறாத ஆசிரியர்களை தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு கடந்த 19 ஆம் திகதி வலம்புரிப் பத்திரிகையூடாகக் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.தில்லைநடராஜா அறிவித்திருந்தார்.

தம்முடன் தொடர்புகொள்ள ஆசிரியர்கள் எதிர் நோக்கும் சிரமங்களைக் கருத்தில் கொண்டு வலயக் கல்விப் பணிப்பாளர்களை வெளிமாவட்ட ஆசிரியர்களுக்கு தற்காலிக இணைப்பு வழங்குமாறு தாம் அறிவுறுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள யாழ்ப்பாணம், தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம் மற்றும் தீவகம் ஆகிய ஐந்து வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்குத் தாம் இவ்வறிவித்தலை எழுத்து மூலம் அனுப்பிவைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இனி தற்காலிக இணைப்பு வழங்கக் கோரி தம்முடன் தொடர்பு கொள்ள வேண்டியதில்லை எனவும் தமது பிரதேச வலயக் கல்விப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு தமது தற்காலிக இணைப்பைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.தில்லைநடராஜா வலம்புரிக்குத் தெரிவித்தார். *(நேற்று முன்தினம் பிரசுரிக்கப்பட்ட இச் செய்தி தகவலுக்காக மீண்டும் பிரசுரிக்கப்படுகின்றது)* (ச-5)

## பேராசிரியர் கைலாசபதி நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் பேராசிரியர் கைலாசபதி நினைவுப் பேருரை இன்று பிற்பகல் 4 மணிக்கு நிகழ்த்தப்படவுள்ளது.

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி ஆங்கிலத்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் திருமதி செ.சிவபாதம், 'ஆங்கில மொழியும் கற்றல் கற்பித்தல் அபிவிருத்தியும்' என்னும் தலைப்பில், ஆங்கிலத்தில், நினைவுப் பேருரையை ஆற்றவுள்ளார். (அ)

முட்டாள்தனத்தை மூலதனமாக கொண்டு செயற்படும் எந்தக் காரியமும் வெற்றியை ஈட்டித்தராது.

—பெல்ஜியப் பழமொழி

வலம்புரி

## ஒருமித்துப்பாடுகிறது உலகம் தப்புத்தாளம் போடுகிறது யப்பான்

இலங்கைக்கான நிதி உதவியை நிறுத்தப் போதில்லையென யப்பான் அறிவித்துள்ளது. இலங்கையின் மனித உரிமைகள் கடுமையாக மீறப்பட்டு வருவதாக குற்றஞ்சாட்டியுள்ள மனித உரிமைகள் கண்காணிப்பகம் இலங்கைக்கான நிதி உதவி விடயத்தில் நிதானமாக சிந்தித்து செயலாற்றுமாறு யப்பானைக் கேட்டுக்கொண்டது.

உலக நாடுகளால் இலங்கைக்கு வழங்கப்படும் நிதி உதவியில் அறுபத்து மூன்று வீதமானவை யப்பானால் வழங்கப்படுகின்றன.

எனவே மனித உரிமையை பாதுகாக்குமாறு இலங்கை அரசை வலியுறுத்துவதாக இருந்தால், அது விடயத்தில் யப்பானின் உதவி தேவை என்பது, மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் நிலைப்பாடு.

இலங்கைக்கான நிதி உதவியை பிரிட்டனும் ஜேர்மனியும் இடை நிறுத்தியதுபோன்று யப்பானும் தனது நிதியுதவியை இடை நிறுத்தவேண்டுமென மனித உரிமைகள் கண்காணிப்பகம் கேட்டுக்கொண்டதுடன், அது தொடர்பில் மேற்படி அமைப்பை சேர்ந்த சோபி றிச்சார்ட்சன் யப்பானிய‌ப் பிரதிநிதிகளுடனும் சந்தித்திருந்தார்.

எனினும் இலங்கைக்கான நிதியுதவியை நிறுத்தும் எண்ணம் யப்பானுக்கு இதுவரை இல்லையென யப்பானிய வெளிவிவகார அமைச்சு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினையில் சமாதான பேச்சுவார்த்தையை முன்னெடுக்கும் விடயத்தில் யப்பானின் பங்களிப்பு கணிசமானது.

விசேட தூதுவர் யசூசி அகாஷி பல தடவைகள் இலங்கைக்கு வருகை தந்து அரசுடனும் விடுதலைப்புலிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

சுருங்கக்கூறின் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல் ஹெய்மூக்கு இணையான பங்களிப்பை யப்பானின் விசேட தூதுவர் அகாஷியும் வழங்கியுள்ளார்.

இந்நிலையில் தற்போது இலங்கையில் மனித உரிமைகள் மிகவும் மோசமாக மீறப்பட்டு வருவதை சர்வதேச நாடுகளும், மனித உரிமை அமைப்புக்களும் உணரத் தொடங்கியுள்ளன.

மனித உரிமை மீறல்களை இலங்கை அரசு தவிர்க்கவேண்டுமென்ற கருத்து பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் ஒலித்தபோது இலங்கை அரசு அடைந்த ஆத்திரத்திற்கு அளவே இல்லை.

உலக நாடுகளின் நிதியுதவி எங்களுக்குத் தேவையில்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியிருந்தார்.

ஒரு நாட்டின் பொறுப்புவாய்ந்த பதவியில் இருக்கும் ஒருவர் உலக நாடுகளின் நிதி உதவி தேவையில்லையென தூக்கியெறிந்த போதும் யப்பான் இலங்கைக்கான நிதியுதவியை நிறுத்தப் போவதில்லையெனக்கூறுவது யப்பானின் செயற்பாட்டில் சந்தேகத்தை உண்டு பண்ணுவதாகவே அமையும்.

இலங்கை விவகாரத்தில் உலக நாடுகள் அனைத்தும் ஒரே பாதையில் பயணிக்கும்போது யப்பான் மட்டும் பாதை மாறிச்செல்வது அவ்வளவு நல்லதல்ல.

இலங்கைக்கு நிதியுதவி வழங்கவேண்டாமென மனித உரிமை கண்காணிப்பகம் கேட்பது இலங்கை அரசு மீது கொண்ட கோபம் காரணமாகவல்ல. மாறாக இலங்கையில் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். சமாதானம் ஏற்பட வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காகவே.

இவ்விதம் நல்லநோக்குடன் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தினால் யப்பானிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளை அந் நாடு நிராகரித்தமையானது;

இலங்கையில் நிகழும் மனித உரிமை மீறல்களுக்கு யப்பானும் ஆதரவு வழங்குவதாகவே பொருள் கொள்ளப்படும்.

# யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீது புலிகளின் கவனம் திரும்பியுள்ளது

## முன்னாள் இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

மரபு வழிச்சமரில் வலிமை பெற்றுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளை தோற்கடிப்பது மிகவும் கடினம் என்று இராணுவத்தின் முன்னாள் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சரத்முனசிங்க கூறியுள்ளார். கொழும்பு ஊடகமொன்றுக்கு அவர் அளித்த நேர்காணலில் கூறியுள்ளதாவது,

தமிழீழ விடுதலைப்புலிகளை அழிப்பது என்ற அரசாங்கத்தின் இராணுவ உத்தி அவ்வளவு தெளிவானதாக இல்லை எனக்கருதுகின்றேன். வட பகுதியில் நாம் முன்னகர்வு முயற்சிகளில் இருக்கிறோம். இருப்பினும் அவர்கள் அடிக்கடி வான் வழித் தாக்குதல்களை நடாத்துகின்றார்கள்.

கிழக்குப் பகுதிகளில் இராணுவம் முன்னேற்றமடைந்து எவ்வித நேரடிமோதலுமின்றி சில பகுதிகளை கைப்பற்றியுள்ளது. இது புலிகளுக்கு கிழக்கில் உள்ள பலவீனத்தை வெளிப்படுத்துகிறது.

இதில் கருணா குழுவுக்கு பாரிய பங்கு இருக்கிறது அதற்காக கிழக்கில் இருந்து புலிகள் முழுமையாக வெளியேறிவிட்டார்கள் என்பது அல்ல. நூறுபேர் அளவிலான புலிகளே அங்கு இருப்பர். விரும்பும் போது பயங்கரவாதத்தாக்குதல்களை அவர்கள் மேற்கொள்ளக்கூடும். அதே நேரத்தில் வட பகுதியில் விடுதலைப்புலிகள் வேறுவகையான உத்தியைக் கையாண்டுள்ளனர்.

விடுதலைப்புலிகள் தற்போது வட பகுதியில் மேலதிக கவனமெடுத்து வருகின்றனர். குறிப்பாக யாழ்.குடாநாட்டின் மீது கவனமாகவுள்ளனர். தமிழீழ விடுதலைப்புலிகளை தோற்கடிப்பது என்பது மிகவும் கடினமானது. ஏன் கடினமெனச் சொல்லுகின்றேன் எனில், தமிழீழ விடுதலைப்புலிகளின் வரலாற்றை முழுமையாக அறிந்தவன் நான்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இப்போது மரபுவழி சமருக்கானவர்களான வளர்ச்சியடைந்துள்ளனர். இராணுவம் தரைத்தளத்தில் முன்னகர்வை மேற்கொள்ளும்போது அனைத்து வகை எதிர்த்தாக்குதல்களையும் நடாத்துகின்றனர். அதேபோல் வான்வழித்தாக்குதல் தகைமையையும் அவர்கள் பெற்றுள்ளனர்.

கடலிலும் கடற்படையைத் தாக்கும் வலிமையைப் பெற்றுள்ளனர். ஆகையால் தமிழீழ விடுலைப்புலிகளின் மரபுவழிவலுவை தோற்கடிப்பது கடினம் எனக்கூறுகின்றேன். ஆனால் அதுவே இராணுவத்தின் இலக்காக இருக்கிறது.

பங்கரவாதத்தை ஒழிப்பது என்பது மிக மிக கடினமான நடவடிக்கை. பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள இளைஞனிடம் உளவியல் ரீதியாகவும் அதன் பின்னர் அரசியல் தீர்வையும் முன்வைக்கும்போது பயங்கரவாதம் ஒரு நாள் இல்லாமல் போகும்.

ஆனால் இது இரண்டாம் நிலைதான். முதலில் தமிழீழ விடுதலைப்புலிகளின் மரபுவழி வலுவை தோற்கடிக்க வேண்டும். இனப்பிரச்சினைக்கு போர் கண்டிப்பாக தீர்வாகாது. இலங்கை ஒரு அமைதியான தீவு. இங்கே தமிழ் மக்கள் மிகவும் அமைதியாக வாழ்ந்து வந்தனர்.

இன்று தமிழ் மக்கள் அப்பாவிகளாக அமைதியை விரும்புபவர்களாக உள்ளனர். ஆனால் தமிழ் மக்களிடத்தில் ஒரு குழு போராடத்தொடங்கி பயங்கரவாதத்தை கையில் எடுத்துள்ளனர். வலுச்சமநிலையில் இருந்துதான் இறுதித்தீர்வு காணப்படவேண்டுமே தவிர பலவீனமான நிலையில் இருந்து அல்ல.

விடுதலைப்புலிகளின் எண்ணிக்கை என்பது குறைவாக இருக்கலாம். ஆனால் நன்கு பயிற்சி பெற்ற போராளிகள் போதுமான அளவில் உள்ளனர். இராணுவத்துடன் அவர்கள் மரபு வழிச்சமரை நீண்டகாலமாக நடத்தி வருகின்றனர். முல்லைத்தீவு, பூநகரி போன்ற பல பாரிய படைத்தளங்களை அவர்கள் கைப்பற்றியுள்ளனர்.

இத் தளங்களை கைப்பற்றியதன் மூலம் பாரிய அனுபவங்களைப் பெற்றுள்ளனர். ஆகையால் விடுதலைப்புலிகள் எண்ணிக்கையைவிட திறமையை அதிகம் வளர்த்துள்ளனர்.

1995 ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. தற்போது கிழக்கில் இருந்து குறிப்பிடும்படியான போராளிகளை திரும்ப அழைத்துள்ளனர். இவையெல்லாம் பாரதூரமாக கணக்கில் எடுக்கப்பட வேண்டும். எந்த ஒரு பாரிய தாக்குதலுக்கும் தயாராக உள்ளனர். கருணாவை அரசாங்கம் பயன்படுத்துகிறதா? இல்லையா? என்பது உண்மையில் எனக்குத் தெரியாது. ஊடகச் செய்திகள் அப்படித்தான் கூறுகின்றன.

எதிரியை வீழ்த்துவதற்காக எது கிடைக்கிறதோ அதனை அரசாங்கங்கள் பயன்படுத்துகின்றன. கருணாவை அரசாங்கம் பயன்படுத்துகிறது எனில் நாம் நல்ல முடிவை எட்டுவோம். புலிகள் இயக்கத்தில் நீண்ட காலம் இருந்தவர் கருணா. பிரபாகரனின் நம்பிக்கைக்குரியவராக இருந்தவர். அவர்களை இராணுவம் முறையான வழிகளில் பயன்படுத்துகிறதா? எனத்தெரியவில்லை.

ஒரு கட்டத்தில் ஈ.பி.டி.பியினரை இராணுவத்தில் சேர்த்தோம் என்பது உண்மை. சீருடையும் உணவும் அவர்களுக்கு வழங்கப்பட்டன. ஆயுதங்களும் கையளிக்கப்பட்டு ஒட்டுமொத்த ஊர்காவற்றுறைத் தீவும் டக்ளஸ் தேவானந்தாவின் கீழ் கொண்டு வரப்பட்டது. கருணா குழுவினரை அரசாங்கம் இராணுவத்தில் இணைத்துக்கொள்ள வேண்டும். இராணுவத்தினராக அவர்களை அங்கீகரித்து பயிற்சியும் அளிக்க வேண்டும் என்றார் சரத்முனசிங்க. (ச-5)

# இல்லத்தில் இடம்பெறும் வன்முறைகளுக்கு எதிராக இரு சட்டங்களின் கீழ் வழக்குத் தொடரலாம்

## சட்டத்தரணி தில்லைராசன் உரை

(கொழும்பு)

வன்முறைச் சம்பவங்களுக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரம் இதுவரை பொலிஸாரிடையே ஒப்படைக்கப்பட்டிருந்தது. இச் சட்டப்பிரிவின் காரணமாக குற்றம் ஒன்றிற்கு ஒரே நேரத்தில் குற்றவியல் வழக்கொன்றினையும் குடியியல் வழக்கொன்றினையும் தாக்கல் செய்ய முடியும்.

இதன்பொருட்டு இல்லத்து வன்செயலில் ஈடுபட்டவர் குற்றவியல் சட்டத்தின் கீழும், குடியியல் சட்டத்தின் கீழும் தண்டனை பெறுவதற்கு இச் சட்டம் வழி வகுத்துள்ளது. இவ்வாறு சட்டத்தரணி ச.தில்லைராசன் தெரிவித்தார்.

கிண்ணியா அரச அலுவலகர்களுக்கான சட்ட விழிப்புணர்வு கருத்தரங்கில் உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்தார். சட்டத்தரணி ச.தில்லைராசன் தொடர்ந்து உரையாற்றுகையில், இல்லத்திற்கு வெளியில் இடம்பெறும் வன்முறைகளை தடுப்பதற்கு பல சட்டங்கள் காணப்படுகின்றன.

அதேபோல் இல்லத்து வன்முறைகளை தடுத்து நிறுத்துவதும் அரசின் பொறுப்பாகும். அதனாலேயே 2005 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கத்து வன்செயல் தவிர்ப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

இல்லத்து வன்முறையானது இல்லத்தினை நாசம் செய்வதுடன் பிள்ளைகளின் எதிர்காலத்தையும் நாசம் செய்கிறது. இல்லத்து வன்முறைகளில் பாதிக்கப்படுவோர்களில் அநேகமானோர் பெண்களும் பிள்ளைகளும் வயோதிபர்களுமாவர்.

இல்லத்து வன்முறைக்கு முகம் கொடுக்கும் பெண்கள் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் பாதிக்கப்படுகின்றனர். இவற்றுக்கு உள்ளாகாது வாழ்வதற்கு பெண்களுக்கு உரிமை உண்டு. இல்லத்து வன்முறையால் பாதிக்கப்பட்டவர் குடியியல் வழக்கொன்றை சட்டத்தரணி ஒருவர் மூலம் நீதிமன்றத்தில் கோப்பிட முடியும்.

பொருளாதார வசதி அற்றோர் சட்ட உதவி ஆணைக்குழுவின் நிலையத்தினை அணுகினால் அவ் வழக்கு இலவசமாக செய்து கொடுக்கப்படும். இல்லத்து வன்முறை தொடர்பாக நீதிமன்றம் சென்றதும் பாதிக்கப்பட்டவர்களின் நன்மை கருதி நீதிமன்றம் பாதுகாப்புக் கட்டளை ஒன்றை வழங்கும்.

இந் நடவடிக்கைகள் மூலம் துன்புறுத்தியவர் பாதிக்கப்பட்டவரின் வீட்டிற்குள் அல்லது தொழில் செய்யும் நிலையத்தினுள் அல்லது பிள்ளையின் பாடசாலைக்குள் நுழைவது தடுக்கப்படுகின்றது என சட்டத்தரணி தில்லைராசன் மேலும் தெரிவித்தார். (ச)

# கைதி ஒருவருக்கு 5ஆயிரம் ரூபாவும் மாணவனுக்கு 1500 ரூபாவும் செலவு

(கொழும்பு)

நாட்டில் அரச பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர் ஒருவருக்காக அரசாங்கம் மாதம் ஒன்றுக்கு ஆயிரத்து 500 ரூபாவை செலவிடுவதாக அரசின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குற்றச் செயல்கள் காரணமாக சிறைத் தண்டனையை அனுபவிக்கும் கைதி ஒருவரை பராமரிப்பதற்காக அரசு மாதம் ஒன்றுக்கு 5 ஆயிரம் ரூபாவரை செலவிடுவதாக மேலும் தெரியவருகிறது.

சிறைச்சாலைக் கைதிகளுக்கு அதிக பாதுகாப்புக்கள்; அத்தியாவசிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அதிக பணம் ஒதுக்கப்படவேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதைய அறிக்கைகளின்படி நாட்டில் 40 இலட்சம் மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இதேவேளை நீதிமன்றங்களினால் வருடத்திற்கு சுமார் ஒரு இலட்சம் பேர் சிறைச்சாலைக்கு அனுப்பப்படுகின்ற போதும் வருடாந்தம் அதிகமானோர் விடுதலை பெறுகின்றனர். இதனால் வருடத்திற்கு சுமார் 25 ஆயிரம் கைதிகளுக்கே அரசாங்கம் செலவிடுகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# ஓமந்தைப் பாதை மூடப்பட்டதால் வன்னியில் உணவுப் பற்றாக்குறை அபாயம்

(கிளிநொச்சி)

வன்னிப் பகுதிக்கான போக்குவரத்துப் பாதையான ஓமந்தை மற்றும் உயிலங்குளம் சோதனைச் சாவடிகள் மூடப்பட்டுள்ளதால் உணவுப் பற்றாக்குறை உட்பட பெரும் மனித அவலங்களை வன்னிப்பகுதி எதிர்நோக்கியுள்ள்தாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இருதரப்புகளிடமிருந்தும் பாதுகாப்புஉத்தரவாதங்கள் பெறப்படும் வரையில் சோதனைச் சாவடிகளில் தமது அதிகாரிகளை நியமிக்க முடியாதென சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த தாமதத்தினால் வன்னிப் பகுதிக்கான உணவு, மருந்து விநியோகங்கள் தடைப்பட்டுள்ளன. முகமாலைப் பாதை மூடப்பட்ட பின்னர் வன்னிக்கான பிரதான வழங்கல் பாதையாக ஓமந்தைப் பாதையே இருந்து வந்துள்ளது.

இது தொடர்பில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பேச்சாளர் டேவிற் விக்னாரி தெரிவித்துள்ளதாவது,

நாம் பாதையைத் திறப்பது தொடர்பாக விடுதலைப்புலிகளின் அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளரான தங்கனுடன் கலந்துரையாடி வருகின்றோம்.

படையினர் தாக்குதலை நடாத்தினால் அதிலிருந்து தம்மை பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி ஏற்படும் என தங்கன் தெரிவித்துள்ளார்.

எனினும் பாதை மூடப்பட்டதற்கு விடுதலைப்புலிகளே காரணம் எனப் படையினர் குற்றஞ்சாட்டி வருகின்றனர். விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு தொடர்பாக தற்போது அரசுடன் கலந்துரையாடப்பட்டு வருகின்றது.

இது தொடர்பாக எமது குழுவினர் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளையும் கடந்த இரவு சந்தித்துள்ளனர். எனினும் அதில் விவாதிக்கப்பட்டவை தொடர்பாக உடனடியாக தகவல் எதுவும் இல்லை.

எமக்கு உறுதியான பாதுகாப்பு உத்தரவாதங்கள் கிடைக்கும் வரை நாம் எமது உறுப்பினர்களை அங்கு நிறுத்தப்போவதில்லை. எமது அதிகாரிகளின் உயிர்களை ஒரு ஆபத்தான நிலையில் வைக்க நாம் விரும்பவில்லை.

இந்தப் பாதைகள் மேலும் இரண்டு அல்லது மூன்று நாள்களுக்குத் தொடர்ந்து மூடப்பட்டால், அது பாரிய உணவு நெருக்கடிகளை வன்னியில் ஏற்படுத்தும் என்றார் அவர்.

உயிலங்குளம் பாதை கடந்த 18 ஆம் திகதியும் ஓமந்தைப் பாதை கடந்த செவ்வாய்க்கிழமையும் மூடப்பட்டன. பாதை மூடப்பட்டதால் உணவு, மண்ணெண்ணெய் உட்பட அத்தியாவசியப் பொருள்களை ஏற்றி வந்த 35 லொறிகள் ஓமந்தைச் சோதனைச் சாவடிகளில் தரித்து நிற்பதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் எமல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

மேலதிகமாக அத்தியாவசியப் பொருள்களை ஏற்றி வந்த 50 லொறிகள் வவுனியாவில் தரித்து நிற்பதாக வவுனியா மேலதிக அரச அதிபர் பி.எஸ்.ஏ.சார்ள்ஸ் தெரிவித்தார். (ச-5)

# இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம்

(கொழும்பு)

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றும் ஊழியர்களை நிரந்தரப் பணி நியமனம் செய்ய போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் 379 ஒப்பந்த ஊழியர்களும் 879 தற்காலிக ஊழியர்களும் நிரந்தர நியமனங்களைப் பெறவுள்ளனர்.

போக்குவரத்தின் நம்பிக்கை மிக்க நண்பனாக அரச போக்குவரத்துத் துறை தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையில் பணி நியமனம் மற்றும் பதவி உயர்வுகளைப் பெறுவதற்கென ஒரே தகுதி அரசியல் என்ற நிலை தற்போது இல்லாமல் போயுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

28 வருடங்களின் பின்னர் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் உயர் பதவிகளுக்காக நேர்முகப் பரீட்சை நடாத்தி அதன் மூலம் ஊழியர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டதாகப் போக்குவரத்து அமைச்சர் கூறியுள்ளார். (ச-3)

## ஹெலஉறுமய...

சமர்ப்பிக்கவுள்ளதாக ஜாதிக ஹெலஉறுமயவின் சட்ட ஆலோசகர் உதய ஹம்மாபில தெரிவித்தார்.

ஜாதிக ஹெலஉறுமய, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் இதுவரை தமது தீர்வு யோசனைகளை தமது குழுவிடம் சமர்ப்பிக்கவில்லை என சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் அமைச்சர் திஸ்ஸ விதாரண கூறியுள்ளார். (ச-3)

## கந்தபுராணப் படனம்

(யாழ்ப்பாணம்)

கந்தபுராணப் படனப் பூர்த்தி விழா எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 7 மணிக்கு நல்லூர் தேரடியில் நடைபெறவுள்ளது.

திருமுருகன் அடியார் திருக்கூட்டத் தலைவர் திருமதி ப.சோமசுந்தரம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் 'வள்ளியம்மன் திருமணம்' கந்தபுராணப் படனம் பிரபல வெளராணிகர் தவத்திரு சிவ.சண்முகவடிவேலால் பாடப்படவுள்ளது. (ச)

## தற்கொலைத்...

உறுப்பினர் ஒருவரும் உயிரிழந்ததாகப் பாதுகாப்புப் படைத் தரப்பினர் மேலும் தெரிவித்துள்ளனா.

எனினும் இத் தாக்குதல் குறித்து தமிழீழ விடுதலைப்புலிகள் தீரப்பில் தகவல்கள் வெளியாகவில்லை. (ச-3)

## முன்னாள்...

தீவிர ஈடுபாடு காட்டுவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அமைச்சரவையிலிருந்து மங்கள சமரவீர நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து சந்திரிகாவுடன் மங்கள ஆலோசனை நடாத்தியுள்ளார். இதனைச் சுட்டிக்காட்டி அவர் அரசியலில் தீவிரம் காட்டுவார் என கூறப்படுகின்றது. (ச)

## பாரிய நிதி நெருக்கடியில்...

கண்டி குண்டகசாலைத் தேர்தல் தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் பொருட்டு நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இக் கருத்தினை வெளியிட்டுள்ளார்.

தற்போது அரசாங்கத்திற்கு எதிராக ஊழல் மோசடிகள், முறைகேடுகள் குறித்து பாரிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றன.

இந் நெருக்கடிகளுக்குள் வாழ்க்கைச் செலவு அதிகரித்து வருவதால் மக்கள் அதற்கு ஈடுகொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடி அதிகரித்து வருவ்தோடு அரசாங்கமும் நிதிநெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது.

இவ்வாறான நிலை நாட்டிற்கு ஏற்றதில்லையெனத் தெரிவித்த பொதுச் செயலாளர், ஊழல் மோசடிகள், வன்செயல்கள் அதிகரித்து வருவதால் அரசாங்கத்தைக் காக்கும் திட்டத்திற்கும் மக்களைப் பங்கு பற்றச் செய்வதே தமது அடிப்படை நோக்கம் எனவும் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்புச் செலவு எல்லை மீறிச் செல்வதால் அதற்கான முழுப்பணமும் சாதாரண மக்களே செலுத்த வேண்டிய நிலை ஏற்படும் என ஆய்வாளர்கள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-3)

## இலங்கையின் இனப்பிரச்சினை...

இதன்போது இலங்கை தொடர்ந்தும் இருள் சூழ்ந்த நிலையிலேயே இருப்பதாகப் பேராயர் தெரிவித்தார். தமது நாட்டில் பல வருடங்களாக இடம்பெற்று வந்த இன மோதலில் பல லட்சக்கணக்கான மக்கள் பலியானதைச் சுட்டிக்காட்டிய அவர்,

தற்போது தமது நாடு அதிலிருந்து மீண்டு அனைத்துத் தரப்பினருக்கும் முன்மாதிரியாக வாழ முடியும் என்று நிரூபித்திருப்பதாகவும் அவர் கூறினார்.

1994 ஆம் ஆண்டு உலகம் முழுவதும் ருவாண்டா நினைத்து அந்நாடு அழிந்து விட்டது என்று சொல்லப்பட்டது. அந்நாட்டைக் கட்டி எழுப்ப முடியாதென்று மேற்குலகம் சொன்னது.

ஆட்களை ஆட்கள் கொல்கிறார்கள் என்றெல்லாம் கூறப்பட்டிருந்தது. இப்போது அந் நிலைமை மாறிவிட்டது. ஆபிரிக்காவில் மிகவும் பாதுகாப்பான மற்றும் துப்புரவுமிக்க நகரம் என்று ருவாண்டாவின் தலைநகரமான ஹொலி தற்போது விளங்குகிறது என்று கூறிப் பெருமைப்பட்ட அவர், இலங்கையைப் பொறுத்தவரையில் மனித வளம் உட்பட சகல வளங்களையும் கொண்ட ஒரு நாடாகவுள்ளது.

ஆனால் சமாதானம் வந்தால்தான் அபிவிருத்தி காண முடியும். இந் நாட்டினால் பேச்சுவார்த்தை மூலந்தான் அமைதித் தீர்வை எட்டமுடியும். இல்லை என்றால் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடையாது. நிலைமை மேலும் மோசமடையும் என்றார் திருச்சபையின் பேராயர் பகாவு. (ச-3)

## குரும்பமலைத்...

விடுதலைப்புலிகள் நடத்திய மோட்டார் மற்றும் ஆட்லறித் தாக்குதலில் 18 சிறப்புப் பயிற்சி பெற்ற அதிரடிப் படையினர் படுகாயமடைந்துள்ளதாகப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

படுகாயமடைந்தோரில் 11 பேர் அம்பாறை மருத்துவமனையிலும் 7 பேர் மகாஓயாவிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச-5)

## நெடுந்தீவுத் தாக்குதலையடுத்து...

தொண்டி, மல்லிப்பட்டினம், கோடியக்கரை உள்ளிட்ட ஆறு இந்தியக் கடற்படை முகாம்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவின் சர்வதேச கடல் எல்லையில் 5 போர்க் கப்பல்கள் 24 மணித்தியாலங்களும் கண்காணிப்பை மேற்கொண்டு வருகின்றன.

விடுதலைப்புலிகளின் தாக்குதல் இந்தியாவில் அதன் விளைவுகள் எதுவும் நிகழாது தடுக்கவே ரோந்துப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக இந்திய உளவுத்துறையின் உயர் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

கடற்படையினரும் தமிழீழ விடுதலைப் புலிகளும் மோதல்களில் ஈடுபடும்போது அவர்களில் எத்தரப்பினராவது இந்திய கடற்பகுதிக்குள் நுழைய வாய்ப்புள்ளதாகவும் அதனால் தாம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (ச-3)

## மோதல்களை...

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கை குறித்து இச் சந்திப்பின்போது ஈரான் வெளிவிவ கார அமைச்சருக்கு விளக்கமளிக்கப்பட்டதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கையில் எண்ணெய் அகழ்வு ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு இரு நாடுகளுக்குமிடையிலான ஒத்துழைப்புக் குறித்தும் இச் சந்திப்பின் போது உரையாடப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம இன்று ஈரான் ஜனாதிபதியைச் சந்திக்கவுள்ளார். (ச-3)

## விமானப் பாதுகாப்பு நிலைகளைத் தகர்த்த...

கடற்புலிகள் நடத்திக் கொண்டிருந்த வேளையில் நெடுந்தீவுக் கடற்படைத் தள அதிகாரிகள் விமானத் தாக் குதல் உதவியை கோரிய போதும் இலங்கை விமானப் படை தாக்குதல் விமானங்களை சம்பவ இடத்திற்கு அனுப்ப மறுத்து விட்டது.

தாக்குதலை முடித்துக் கொண்டு விடுதலைப்புலிகள் படகுகளில் திரும்பும் போது தான் இலங்கை விமானப் படையின் தாக்குதல் விமானங்கள் அங்கு சென்று விடுதலைப் புலிகளின் படகுகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளன.

இலங்கை அரச படைகள் நிலைநிறுத்தியுள்ள விமான எதிர்ப்புப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் சீர்குலைத்து விமான எதிர்ப்பு ஆயுதங்களைக் கைப்பற்றுவதனை நோக்கமாகக் கொண்டே விடுதலைப்புலிகள் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இவ்வாண்டு மார்ச் மாதம் 26 ஆம் திகதி விடுதலைப்புலிகள் கொழும்பில் விமானத் தாக்குதலை முதன்முதலாக நடத்தும்வரை இலங்கையின் வான்பரப்பை இலங்கை விமானப் படை தனது முழுக்கட்டுப்பாட்டில் வைத்திருந்தது.

வடக்குக் கிழக்கிலுள்ள விடுதலைப்புலிகளின் நிலைகள் மீது இலங்கை விமானப் படை தாக்குதல்களை நடத்தி பொதுமக்களின் பாதிப்புக்கும் காரணமாகவிருந்தது.

இத்தகைய வான் தாக்குதல்களை எதிர்கொள்ளத்தக்க வகையில் விடுதலைப்புலிகளிடம் விமான எதிர்ப்பு ஆயுதங்கள் இருக்கவில்லை. இதனைத் தடுக்கக் கூடிய வகையில் விமான எதிர்ப்பு ஆயுதங்களையும் ஏவுகணைகளையும் கொள்வனவு செய்வது விடுதலைப்புலிகளுக்கு மிகவும் கடினமான தொன்றாகவே இருந்து வந்தது.

விடுதலைப்புலிகளின் வான் தாக்குதல்களைத் தொடர்ந்து இலங்கை இராணுவம் கடற்படைத் தளங்களில் விமான எதிர்ப்பு ஆயுதங்களைப் பொருத்திப் பாதுகாப்பினைப் பலப்படுத்த வேண்டிய அவசர தேவை இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது.

இதுவரை தமிழர் பகுதியிலுள்ள இலங்கை அரச படைகளின் தளங்கள் தரைவழித் தாக்குதலை மட்டுமே எதிர்நோக்கியிருந்த நிலையில் தற்போது வான் வழித் தாக்குதலையும் எதிர்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் விமானத் தாக்குதலானது அதன் மரபுவழித் தாக்குதல் திறமையினை எடுத்துக் காட்டியுள்ளது. இதுவரை கொழும்பில் இரண்டும் யாழ்ப்பாணத்தில் ஒன்றுமாக விடுதலைப்புலிகள் மூன்று தடவைகள் விமானத் தாக்குதல்களை தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கியமான இலக்குகள் மீது நிகழ்த்தியுள்ளனர்.

இத் தாக்குதல் மூலம் விடுதலைப்புலிகள் இலங்கை அரசுப் படைகளிடத்தில் உளவியல் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ள அதே வேளையில் பொதுமக்கள் முன்னிலையில் அரச படைகளின் நம்பகத்தன்மையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

அடுத்ததாக விமானத் தாக்குதல் அச்சத்தால் கொழும்பு சர்வதேச விமான நிலையத்தின் செயற்பாடுகள் இரவில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதனால் சுற்றுலாப் பயணிகளின் வருகையும் குறைவடைந்துள்ளது. இது பொருளாதாரத்திலும் தாக்கத்தினை ஏற்படுத்தி வருகின்றது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வடக்கு-கிழக்கு பிரதேச ஆட்புலங்களை மீட்டெடுப்பதற்காக எதிர்பார்க்கப்பட்ட அரச படைகளின் இராணுவ நடவடிக்கைகள் எடுக்கப்படுவது தாமதமடையத் தொடங்கியுள்ளது.

விடுதலைப்புலிகள் வான்தாக்குதல் திறனை வெளிக்காட்டியதைத் தொடர்ந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் வான் தாக்குதலுக்கு எதிராக கொழும்பு மற்றும் வடக்கு-கிழக்குப் பிரதேச பாதுகாப்புப் படைத் தளங்களை பலப்படுத்த வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதற்காக பாகிஸ்தான் மற்றும் சீனாவுடன் இலங்கை பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளது.

இலங்கை மற்றும் வெளிநாட்டு வர்த்தக சமூகத்தினரிடத்தில் புலிகளின் வான்தாக்குதலினால் ஏற்பட்ட அச்ச உணர்வலையை இலங்கை அரசாங்கத்தினால் இதுவரை போக்கமுடியவில்லை.

குறிப்பாக விமானப் போக்குவரத்து சுற்றுலாத்துறைகளில் பலத்த பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. விடுதலைப்புலிகளின் விமானத் தாக்குதல் அரசாங்கம் மற்றும் பாதுகாப்புத் தரப்பினரிடம் எதிர்மறையான தாக்கத்தினைத் தொடர்ந்தும் ஏற்படுத்திக் கொண்டேயிருக்கின்றது. (ச-5)

## கிளைமோர்த்...

தாகத் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அங்குள்ள விசேட அதிரடிப்படையினர் முகாமுக்கு பொருள்களை விநியோகம் செய்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த லொறி ஒன்றே இத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது. இதில் பயணித்த 3 பேர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-3)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Accounting packages
ICT, GIT
VB, DTP
MCS
Supported By UNDP/JRRP
விபரங்களிற்கும், பதிவுகளிர்கும் 30-05-2007 முன் நேரில்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
(பரமேஸ்வராசந்தி அருகே)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.05.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.